| O.S.No.164/2022 | PW1 : திருமதி. கீதா க/பெ. திரு. சதீஷ் | 05-03-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1 முதல் 3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் பாப்பான்தாங்கல் கிராமத்தில் வசிக்கிறேன். 1–ம் பிரதிவாதி ரங்கநாதன் என்னுடைய பாட்டனார். 2, 3 பிரதிவாதிகள் எனது தாயாருடன் பிறந்தவர்கள். முத்தபிள்ளை என்பவர் எனது தாத்தா ரங்கநாதனின் தந்தை ஆவார். முத்தபிள்ளைக்கு 4 மகள்கள், 1 மகன் ஆவார். அவர்கள் பெயர் முனியம்மாள், தனபாக்கியம், எல்லம்மாள், கண்ணம்மாள் மற்றும் 1–ம் பிரதிவாதி ரங்கநாதன் ஆகும். கண்ணம்மாளின் மகள்தான் நீலா என்கின்ற நீலாவதி. கண்ணம்மாளின் மகளான நீலாவை தனது சகோதரரான 1–ம் பிரதிவாதி ரங்கநாதனுக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். ரங்கநாதன் – லீலா தம்பதியர்களுக்கு மொத்தம் 3 மகள்கள், ஆண் வாரிசுகள் இல்லை. 1–ம் பிரதிவாதியின் குமாரத்தி அமுதா என்னுடைய தாயார் ஆவார்.

2. எனது தாயார் அமுதாவை நீலா தன்னுடைய உடன்பிறந்த சகோதரரான ராமு என்பவருக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். அதனால் நாங்கள் அனைவரும் ஒன்றுக்கொன்று உறவினர்கள் ஆவோம். எனது தாயார் 04.12.2020–ல் இறந்துவிட்டார். எனது தாயார் உயிருடன் இருந்த வகையில் எனது தாத்தா ரங்கநாதனிடம் சொத்துக்களை பிரித்து கொடுக்க சொல்லி எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல, எனது தாயார் கேட்டார் ஆனால் அவர் கொடுக்கவில்லை. பாகம் கொடுக்கவில்லை என்பதால் எனது தாயார் வழக்கு ஏதேனும் போட்டாரா என்றால் இல்லை.

3. எனது தாயார் அமுதாவின் வாரிசு எனது அப்பா ராமுவும், வாதிகளும் ஆவார்கள். நானும், எனது சகோதரியும்தான் இவ்வழக்கினை போட்டுள்ளோம், என் அப்பாவை பார்ட்டியாக சேர்க்கவில்லை. வழக்கு சொத்துக்கள் ஆதியில் யாருக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் என் தாத்தாவிற்கு சொந்தமான பூர்வீக சொத்துக்கள் ஆகும். தாவா சொத்துக்கள் முத்தபிள்ளை மற்றும் அவரது மனைவி அலமேலு அம்மாளுக்கு பாத்தியப்பட்டது ஆகும்.

4. தாவா சொத்துக்களை பொருத்து முத்தபிள்ளை 1-ம் பிரதிவாதி மீது உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான், பெண்கள் பாகம் கேட்கப்போகிறார்கள் என்பதற்காக அதனை எழுதி வைத்துவிட்டார். அந்த உயிலினை படித்து பார்த்தீர்களா என்றால் இல்லை, அந்த உயிலினை என்னிடம் காண்பிக்கவில்லை. அந்த உயிலில் பெண் வாரிசுகளுக்கு சொத்தில் உரிமை இல்லை என்றும், ஆண் வாரிசான ரங்கநாத பிள்ளைக்கு முத்தப்பிள்ளையின் ஆயுட்காலத்திற்கு பிறகு சென்றடைய வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் அலமேலு அம்மாளும் அவருக்கு சொந்தமான சொத்துக்களை 1-ம் பிரதிவாதி ரங்கநாதனுக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான்.

5. ரங்கநாதனின் மனைவி நீலா ஏழ்மையான குடும்பத்திலிருந்து வந்தவர் என்றால் இல்லை, வசதியான குடும்பத்திலிருந்துதான் வந்தார். நீலா எந்த தொழிலும் பண்ணவில்லை. நீலா 1-ம் பிரதிவாதி ரங்கநாதனுடன் குடும்பம் நடத்தினார், நீலாவுக்கு தனிப்பட்ட வருமானம் ஏதும் இல்லை. 1-ம் பிரதிவாதி ரங்கநாதன் சில சொத்துக்களை வாங்கியுள்ளார் என்றால் இல்லை. அவருடைய மனைவி நீலா பெயரில் சில சொத்துக்கள் வாங்கினார் என்றால் இல்லை.

6. வழக்கு சொத்துக்கள் எந்தெந்த ஆவணத்தின் அடிப்படையில் 1–ம் பிரதிவாதிக்கும், அவருடைய மனைவி நீலாவுக்கும் வந்தது என்பதற்கு ஆதாரமாக வில்லங்கம் போட்டு பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். அந்த வில்லங்கத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்தேன். தாவா 1–வது அயிட்ட சொத்து 1–ம் பிரதிவாதி ரங்கநாதன் 1981–ம் ஆண்டு தனிமையில் கிரையம் பெற்ற சொத்து என்றால் இல்லை, பூர்வீக சொத்து ஆகும்.

7. வழக்கில் கண்டுள்ள அனைத்து சொத்துக்களும் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றாலும், 1–ம் பிரதிவாதி ரங்கநாதனும், அவரது தந்தை முத்தப்பிள்ளையும் மற்றும் ரங்கநாதன் மனைவி நீலாவும் தனிமையில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரியல்ல. முத்தப்பிள்ளை அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொருத்து ஒரு உயில் 1–ம் பிரதிவாதி ரங்கநாதன் பெயரில் ஏற்படுத்தி வைத்துள்ளதால், அச்சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியமான சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. இதர சொத்துக்கள் 1–ம் பிரதிவாதியின் தனிப்பபட்ட சொத்துக்கள் என்றால் இல்லை, எல்லாமே பூர்வீக சொத்துக்கள்தான்.

8. பூர்வீக சொத்துக்கள் என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் என்னுடைய தாத்தா 1–ம் பிரதிவாதி வைத்துள்ளார். முத்தப்பிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு 1–ம் பிரதிவாதி வாரிசாக உள்ள நிலையில் அச்சொத்துக்கள் பூர்வீக சொத்துக்களாக வராது என்று சொன்னால் சரியல்ல. அதனால், சொத்துக்களில் எங்களுக்கோ, எங்களது தாயாருக்கோ எவ்வித பாத்திய உரிமையோ கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் என் தாயாருக்கு எவ்வித பாக உரிமையும் இல்லாத

காரணத்தினால்தான் அவர் உயிருடன் இருக்கும் வரையில் சொத்துக்களில் பாகம் கேட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9. அதேபோல் வழக்கு சொத்துக்களை 1 முதல் 3 பிரதிவாதிகள் சேர்ந்து கூட்டுக்குடும்பமாக அனுபவித்து வருகிறோம் என்று பொய்யாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, கூட்டுக்குடும்பமாக அனுபவித்து வருகிறோம். வழக்கு சொத்துக்களை கூட்டுக்குடும்பமாகத்தான் அனுபவித்து வருகிறோம் என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் போட்டுள்ளீர்களா என்றால் இல்லை, 3 தலைமுறைகளாக அனுபவித்து வருகிறோம்.

10. என் தாயார் இருந்த காலத்திலும், தற்போது நாங்களும் 1-ம் பிரதிவாதியை சவரட்சனை செய்ததே இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள்தான் 1-ம் பிரதிவாதியை சவரட்சணை செய்து வருகிறார்கள் என்று சொன்னால் இல்லை. 2, 3 பிரதிவாதிகள் தற்போத அவர்களது கணவர்களுடன் புதூர் கிராமத்தில் தனித்தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது தந்தையான ராமு என்கின்ற ராமமூர்த்தி 1-ம் பிரதிவாதியிடம் சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்கிறார் என்றால் சரியல்ல.

11. வாதிகளான எங்கள் இருவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. என்னை மடிப்பாக்கம் கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். தற்போது நான் என் கணவருடன் வாழாமல் என் தந்தையுடன் வசித்து வருகிறேன். என்னுடைய சகோதரி 2-ம் வாதியை பாப்பந்தாங்கல் புதூர் கிராமத்திலேயே திருமணம் செய்து கொடுத்தனர். 2-ம் வாதியின் கணவர் வீட்டோட மாப்பிள்ளையாக வந்துவிட்டார். 2-ம் வாதி அவர் கணவருடன்

வாழாமல் சண்டை போட்டுக் கொண்டு என்தந்தையுடன் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை 1–ம் பிரதிவாதியிடமிருந்து ஏமாற்றி அடைய வேண்டும் என்பதற்காக எனது தந்தையின் தூண்டுதலின் பேரில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், எங்களுக்கு பாகப்பிரிவினை செய்துகொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், அதனால் நாங்கள் தாக்கல் செய்துள்ள தாவா நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/– M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**